00077

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வித்துறை
கல்விப்பீடம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் 2019
**ESD2236/ EPD4536 –** சமூக உளவியல்
இறுதிப்பரீட்சை - மட்டம் 04
03 மணித்தியாலங்கள்

---

காலம் : பி.ப 01.30 – பி.ப 04.30 திகதி : 16.03.2019

---

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்

## *பகுதி I*

01. 'சமூக உளவியல்' எனும் பதத்தினை உமது சொந்த மொழிநடையில் விளக்குக?

02. முன்பள்ளிப் பிள்ளைகளிடையே பொதுவாகக் காணப்படும் முரண்பாடான நடத்தைகள் இரண்டினைப் பெயரிட்டு நீங்கள் குறிப்பிட்ட நடத்தைகளை இழிவாக்குவதற்கு ஆசிரியர்கள் எடுக்ககூடிய நடவடிக்கைகளை சுருக்கமாக கலந்துரையாடுக?

03. எவ்வாறு ஜோர்ச் ஹேர்பேட்(Georoge Herbert) 'சமூகநிலை' என்பதை இனங்காண்கின்றார் என்பதனை சுருக்கமாக விளக்குக?

04. நடத்தை மற்றும் மனப்பாங்கு என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளைப் பகுப்பாய்வு செய்க?

05. "இணங்குதல்" எனும் பதத்தை விளக்கி, இணங்குதலில் செல்வாக்கு செலுத்தும் மூன்று காரணிகளைக் குறிப்பிடுக?

06. 'நம்பிக்கை' எனும் பதத்தினால் நீங்கள் கருதுவது யாது?

07. 'பால்', 'பால்நிலை' ஆகிய பதங்களை வேறுபடுத்துக?

08. பிள்ளைகளின் சமூகம்சார் நடத்தைகளில் தாக்கம் செலுத்தும் ஐந்து (05) காரணிகளைக் குறிப்பிடுக?

*(08x05=புள்ளிகள்)*

## பகுதி II

09. (i) 'சமூகநிலை' பற்றி தமது கருத்துக்களைத் தெரிவித்த இரண்டு உளவியலாளர்களின் பெயர்களைத் தருக? (02 புள்ளிகள்)

(ii) பொருத்தமான உதாரணங்களுடன் நீங்கள் மேலே குறிப்பிட்ட இருவருள் ஏதாவது ஒருவரின் கருத்தை சுருக்கமாக விளக்குக? (08 புள்ளிகள்)

(iii) விளையாட்டின் வகிபங்கு, கதைத்தலின் வகிபங்கு என்பன எவ்வாறு பிள்ளைகளின் சமூகநிலைக்கு துணைபுரிகின்றனவென விளக்குக? (10 புள்ளிகள்)

10. (i) மனிதரின் சமூக நடத்தையைப் பற்றி ஆராயும் மூன்று முறைகளை சுருக்கமாக விளக்குக? (10 புள்ளிகள்)

(ii) முன்பள்ளி ஆசிரியரொருவர் இளம்பிள்ளைகளின் சமூக நடத்தைகள் பற்றிய அறிவை ஏன் கொண்டிருக்க வேண்டுமென விளக்குக? (10 புள்ளிகள்)

11. "நட்பு ஆனது முன்பிள்ளைப்பருவத்தில் மிகவும் சுவாரசியமானது"

(i) நட்பு என்னும் எண்ணக்கருவானது எவ்வாறு இளம்பிள்ளைப் பருவத்தில் வேறுபடுகின்றது எனப் பகுப்பாய்வு செய்க?

(10 புள்ளிகள்)

(ii) பிள்ளையொன்றின் உள-சமூக விருத்தியில் நட்பானது எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என்று பரிசிலிக்குக?

(10 புள்ளிகள்)

12. (i) 'பால்நிலை' என்றால் என்னவென்பதைப் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக?

(05 புள்ளிகள்)

(ii) ஆரம்ப வகுப்பு மாணவரின் பால்நிலை வகிபங்கிற்கு ஏற்ற வகையில் வகுப்பறைக் கற்றலுக்கு துணைபுரியக்கூடிய செயற்பாடொன்றினை வடிவமைக்குக. அந்தச் செயற்பாடானது பின்வருவனவற்றினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அ. எதிர்பார்க்கும் கற்றல் பெறுபேறு
ஆ. முன்மொழியும் கற்றல்-கற்பித்தல் சாதனங்கள்
இ. செயற்பாட்டின் உள்ளடக்கம்
ஈ. ஆசிரியரின் வகிபாங்கு
உ. மாணவரின் வகிபாங்கு (15 புள்ளிகள்)

13. (i) பொருத்தமான உதாரணங்களுடன் பிள்ளைகள் எவ்வாறு மனப்பாங்குகளை தோற்றுவிக்கிறார்கள் என விளக்குக? (05 புள்ளிகள்)

(ii) பெற்றோரின் மறையான மனப்பாங்குகளை மாற்றியமைப்பதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மூன்றினை (03) விபரிக்குக?

(06 புள்ளிகள்)

(iii) அ. பிள்ளைகளிடம் நேர்மனப்பாங்கை உருவாக்க ஆசிரியர் பயன்படுத்தும் மூன்று (03) முறைகளைக் குறிப்பிடுக?

ஆ. அம்முறைகளை சுருக்கமாக விளக்குக?

(09 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*